[2018] 3 எஸ்.சி.ஆர். 1

கர்நாடகா மாநில அரசு மற்றும் பலர்

–எதிர்–

தி/ள்.வேதாந்தா லிமிடெட் (முன்னாளில் சேஷா ஸ்டெர்லைட் லிமிடெட்) மற்றும் பலர்

(குற்றவியல் மேல்முறையீடு எண் 348–356/2018)

06.03.2018

முன்னிலை

மாண்புமிகு நீதியரசர் திரு. எ.கே. சிக்ரி

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. அசோக் பூஷன்

குற்றவியல் நடைமுறை சட்டம் 1973 பிரிவுகள் 451 மற்றும் 457 கைப்பற்றப்பட்ட பொருள்களை வழக்கு நிலுவையில் உள்ள போது விடுவிப்பது சம்பந்தமாக – முறையற்ற வகையில் இரும்பு தாதுவை வைத்திருந்ததை கைப்பற்றியது – மாநில அரசு பிரிவு 451 மற்றும் 457 குற்றவியல் நடைமுறை சட்டத்தின் கீழ் கைப்பற்றப்பட்ட இரும்பு தாதுவை இ–டெண்டர் மூலம் அகற்றுவது சம்பந்தமாக– அனுமதி கோரி சிறப்பு சிறப்பு புலனாய்வுத் துறை நீதிபதி 8.5.2015 விண்ணப்பத்தை அனுமதித்து பிறப்பித்து உத்தரவு அதன் பெயரில் எதிர்மனுதாரால் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்யப்பட்டது – உயர்நீதிமன்றம் எதிர்மனுதாரருக்கு சாதகமாக இரும்பு தாதுவை விடுவிப்பதற்குரிய

நீதிப்பேராணைகளை அனுமதித்தது – தீர்முடிவு – உயர் நீதிமன்றம் நீதிப்பேராணைகளை அனுமதிக்கும் போது சிறப்பு புலனாய்வுத் துறை நீதிபதி 15.12.2015 இல் இறுதி அறிக்கையை ஏற்றுக்கொள்ளப்பட்டது கருத்தில் கொண்டுள்ளது 15/12/2015 இறுதி அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்ட வழக்கான குற்ற வழக்கு எண் 2/2014 இரும்பு தாது பறிமுதல் செய்யபட்ட வழக்கு இல்லை – மாறாக இரும்பு தாது கைபற்றப்பட்டது வெவ்வேறு நடவடிக்கை மூலம் என்பதும் அதில் 8.2.2015 உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மாநில அரசால் இரும்பு தாதுவை விடுவிக்க பிரிவு 451/457 ன் கீழ் தாக்கல் செய்த விண்ணப்பம் வேறு நடவடிக்கையில் செய்யப்பட்டுள்ள நிலையில் 15/12/2015 இறுதி அறிக்கையை ஏற்றுக்கொள்வதால் குற்றவழக்கு எண் 172/2014 ல் எந்த விளைவு ஏற்படப்போவதில்லை. உயர்நீதிமன்றம் நீதிப்பேராணை மனுவை அனுமதிக்கும் போது தவறிழைத்தள்ளது, சிறப்பு புலனாய்வுத் துறை நீதிபதியின் 15.12.2015 தேதியிட்ட இறுதி அறிக்கையை ஏற்றுக்கொண்டது. எவ்வாராயினும் எதிர்மனுதாரை தகுந்த விண்ணப்பம் சிறப்பு சிறப்பு புலனாய்வுத் துறை நீதிபதியிடம் கைப்பற்றப்பட்ட இரும்பு தாதுவை விடுவிக்க மனு செய்ய கூடியது. கர்நாடகா வனச்சட்டம் 1963–பிரிவு 2(7) (b)(4)24(e) 62,80 கர்நாடகா வன விதிகள் 1969, 143,162.

இந்நீதிமன்றம் மேல்முறையீட்டை அனுமதித்து தீர்ப்பளித்ததாவது.

தீர்வு: 1) இந்த நீதிமன்றம் நீதிப்பேராணை மனு எண் 562/2009–ல் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவுப் படி சிறப்பு புலனாய்வு குழு புலனாய்வு செய்து இறுதி அறிக்கை குற்ற வழக்கு எண் 2/2014–ல் தாக்கல் செய்ததை 15.12.2015 ல் எதிர்மனுதாருக்கு எதிராக குற்றம் இல்லை என ஏற்றுக்கொள்ளப்பட்டது தெளிவாகிறது. மறுபக்கம் 08.05.2015 ம் தேதி உத்தரவில் வேறு நடவடிக்கைகளில் அங்கோலா காவல் நிலையம் குற்ற எண் 189/2010 ல் முதல் தகவல் அறிக்கை தேதி 15.03.2010 ல் பதிவு செய்ய்பட்டுள்ளது. [பத்திகள் 16, 18] [8–D–E; 9–G–H]

2) 15/12/2015 இறுதி அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்ட வழக்கான குற்ற வழக்கு எண் 2/2014 இரும்பு தாது பறிமுதல் செய்யபட்ட வழக்கு இல்லை என்பது தெளிவாகிறது. மாறாக இரும்பு தாது கைப்பற்றப்பட்டது வெவ்வேறு நடவடிக்கை மூலம் என்பதும் அதில் 8.2.2015 உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மாநில அரசால் இரும்பு தாதுவை விடுவிக்க பிரிவு 451/457 கீழ் தாக்கல் செய்த விண்ணப்பம் வேறு நடவடிக்கையில் செய்யப்பட்டுள்ள நிலையில் 15/12/2015 இறுதி அறிக்கையை ஏற்றுக்கொள்வதால் குற்றவழக்கு எண் 172/2014 ல் எந்த விளைவு ஏற்படப்போவதில்லை. இவ்வாறிருக்க உயர்நீதிமன்றம் இறுதி அறிக்கை 15/12/2015 உத்தரவு ஏற்றுக்கொண்டதாக கூறி நீதிபேராணை மனுக்களை அனுமதித்து தவறிழைத்துள்ளது. உயர்நீதிமன்றம் நீதிபேராணை மனுக்களை அனுமதிக்கும் போது 15.12.2015 ல் சிறப்பு புலனாய்வுத் துறை நீதிபதி இறுதி அறிக்கையை ஏற்றுக்கொண்டதை குறிப்பிட்டுள்ளதில் அது

08.02.2015 ம் தேதி விசாரணை நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவிற்கு தொடர்புடையது இல்லை. [பத்தி 19] [10–F–H]

3) உயர்நீதிமன்றம் பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்புரை முழுமையாக இதன் மூலம் நீக்கரவு செய்யப்படுகிறது. எதிர்மனுதாரர் கைப்பற்றப்பட்ட இரும்பு தாதுவினை விடுவிக்க வேண்டும் என்றால் அதில் அவருக்குரிய உரிமை மற்றும் இருப்பினை நிரூபித்து 32 வது கூடுதல் நகர உரிமையியல் மற்றும் அமர்வு நீதிபதி மற்றும் பெங்களூரு சிறப்பு புலனாய்வுத் துறை வழக்குகளுக்கான சிறப்பு நீதிபதி (CCH–34) முன் தகுந்த விண்ணப்பத்தை தாக்கல் செய்யலாம். அதனுடைய அதிகார வரம்பிற்குட்பட்ட குற்றவியல் நீதிமன்றம் பரிசீலிக்கப்படலாம். குற்றவியல் மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது. [பத்தி 21] [11–C–D]

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு : குற்றவியல் மேல்முறையீடு எண்கள் 348–356/2018

பெங்களூரில் உள்ள கர்நாடகா உயர்நீதிமன்றம் நீதிபேராணை மனு எண் 18941/2016 ல் 04.07.2017 ல் பிறப்பித்த தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து எழுகிறது.

மேல்முறையீட்டாளர் வழக்கறிஞர்கள்– பசவ பிரபு எஸ்.பாட்டில், மூத்த வழக்கறிஞர் வி.என்.ரகுபதி சின்மே தேஸ்பாண்டே, பரிக்ஷித் அங்காடி.

எதிர்மேல்முறையீட்டாளர் வழக்கறிஞர்கள்– துர்வ் மேத்தா, நினந் லௌத், ஜெயந் மோகன், அஞ்சுமன் திருப்பதி, இவோ.டி.கோஸ்டா, ஆதித்யா ஸ்வைன்.

இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரை மாண்புமிகு நீதியரசர் திரு. அசோக் பூஷன், அவர்களால் பகரப்பட்டது.

1. காலதாமதம் மன்னிக்கப்பட்டது. அனுமதி வழங்கப்பட்டது.

2. இந்த மேல்முறையீடு கர்நாடகா உயர்நீதிமன்றத்தில் தடை செய்யப்பட்ட 04.07.2017 ம் தேதி நீதிப்பேராணை மனுக்கள் 18941/2016 மற்றும் 19328–19335/2016 எதிர்த்துரைக்கப்பட்ட உத்தரவு மற்றும் தீர்ப்புரைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டது. நீதிப்பேராணை மனுக்களாக கைப்பற்றப்பட்ட இரும்பு தாதுக்களை விடுவிப்பதற்காக அனுமதிக்கப்பட்டுள்ளதற்கு எதிராக இந்த நீதிப்பேராணை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இந்த மேல்முறையீட்டை முடிவு செய்ய வழக்கு விபரங்கள் தேவைப்படுகிறது.

இரும்பு தாதுக்களை சட்ட விரோதமாக சேமித்து வைத்தது சம்பந்தமாக கர்நாடக வனச் சட்டம் 1963 பிரிவு 2(7)B(4) 62, 80 அதன் விதிகள் 143 பிரிவுகள் படி 15.3.2010 அன்று முதல் தகவல் அறிக்கை எண் 17/2009, 2010 பதிவு செய்யப்பட்டது. கர்நாடக

வன விதிகள் 162, 1969. கர்நாடக வனச் சட்டம், 1963 இன் பிரிவு 24(e) சேர்த்து மேலும் விசாரணைக்கு அங்கோலா முதல் வகுப்பு நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தால் அனுமதி அளிக்கப்பட்டது. 20.3.2010 அன்று சுமார் 5 லட்சம் மெட்ரிக் டன் இரும்பு தாதுக்கள் சட்டவிரோதமாக வைக்கப்பட்டுள்ளதை பறிமுதல் செய்யப்பட்டதற்கு மறு உத்தரவு வரும் வரை அதனை தக்க வைத்துக் கொள்ளுமாறு அங்கோலா முதல் வகுப்பு நீதித்துறை நடுவர் அனுமதித்தார்.

4. மையப் புலனாய்வு குற்ற எண் **RC 17 (A) 2012** ஆக மற்றொரு வழக்கு பதிவு செய்யப்பட்டு அதில் குற்ற அறிக்கையும் சிறப்பு குற்றவியல் வழக்கு 268/2013, சிறப்பு குற்றவியல் வழக்கு 11/2014, சிறப்பு குற்றவியல் வழக்கு 14/2014, சிறப்பு குற்றவியல் வழக்கு 15/2014 சிறப்பு குற்றவியல் வழக்கு 36/2014, சிறப்பு குற்றவியல் வழக்கு 37/2014, சிறப்பு குற்றவியல் வழக்கு 38/2014, சிறப்பு குற்றவியல் வழக்கு 52/2014, சிறப்பு குற்றவியல் வழக்கு 58/2014 முதல்விசாரணை செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டது. அரசு தரப்பில் பிரிவு 451/457 குற்றவியல் நடைமுறை சட்டத்தின் கீழ் பெங்களூரில் உள்ள 32 வது கூடுதல் நகர உரிமையியல் மற்றும் அமர்வு நீதிபதி முன்பாக பெலக்கரி துறைமுகத்தில் உள்ள சுமார் 2,72,713.47 மெட்ரிக் டன் எடையுள்ள 56 இரும்புதாது குவியல்களை அப்புறப்படுத்துவதற்காக அனுமதி கோரி விண்ணப்பித்தது.

5. பேலேகேரி துறைமுகத்தில் கைப்பற்றப்பட்ட 56 இரும்பு தாது குவியல்களை இடைக்காலமாக அப்புறப்படுத்துவதற்காக விண்ணப்பங்கள் வேண்டி தினசரி நாளிதழில் கார்வார் காடுகளின் பாதுகாவலர் 29.3.2015–ம் தேதி வெளியிட்டார். 32 வது கூடுதல் நகர உரிமையியல் மற்றும் அமர்வு நீதிபதி சிறப்பு புலனாய்வுத் துறை வழக்குகளுக்கான நீதிபதி பெங்களூரு விண்ணப்பத்தை (CCH–34) பரிசளித்த பரிசீலனை செய்த பின்பு 8.5.2015–ம் தேதி பிரிவு 451/457 CRPC–ன் கீழ் மனுவினை அனுமதித்து விண்ணப்பதாரர்/அரசு கைப்பற்றப்பட்ட இரும்பு தாதுக்களை இ–டெண்டர் மூலம் குறிப்பிட்டுள்ளபடி அகற்ற சில நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளுக்கு உட்பட்டு அனுமதித்து உத்தரவு பிறப்பித்தது.

6. எதிர்மனுதாரர்களால் மேற்கண்ட 8.5.2015–ம் தேதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவுக்கு எதிராக நீதிப்பேராணை மனு 18941/2016 மற்றும் நீதிப்பேராணை மனு 19328–19335/2016 (GM–MM–S) ஆக பெங்களூரு உயர் நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டது. நீதிப்பேராணை மனுக்களில் கீழ்கண்டவாறு வேண்டுரைகள் கோரப்பட்டுள்ளது.

வேண்டுரை

மேற்குறிப்பிட்டுள்ள காரணங்களினால் தயவுக்கூர்ந்து சமூகம் நீதிமன்றத்தில் கோரும் வேண்டுரை யாதெனில்

(i) 8.5.2015– ம் தேதியில் பிறப்பித்த பெங்களூரில் உள்ள சிறப்பு புலனாய்வுத் துறை வழக்குகளுக்கான 32 வது கூடுதல் நகர உரிமையியல் மற்றும் அமர்வு நீதிபதி சிறப்பு புலனாய்வுத் துறை சிறப்பு நீதிபதி (CCH–34)– ல் சிறப்பு குற்றவியல் வழக்கு எண்கள் 268/2013, 11, 14, 15, 36, 37, 38, 53, & 54/2016– உத்தரவினை மாற்றி அமைத்து நெறிமுறைப்படுத்தும் நீதிப்பேராணை அல்லது பொருத்தமான வேறு நீதிப்பேராணை பிறப்பிக்க இணைப்பு – ஏ மற்றும் மனுதாரரைப் போறுத்தவரை, நீதி மற்றும் நேர்மையின் நலன் கருதி அது தொடர்பான நடவடிக்கைகளை மனுதாரை பொறுத்த வரை மாற்றி அமைக்க உத்தரவிட வேண்டப்படுகிறது.

(ii) மனுதார் இணைப்பு P. P1, P2, சமர்ப்பித்த அறிவிப்பினை 2, 3 மற்றும் 4, 5 எதிர்மனுதாரர்கள் 04.02.2016, 08.02.2016 மற்றும் 24.02.2016 ஆகிய தேதிகளில் சமர்ப்பிக்கப்பட்ட மனுக்கள் பெலாகர் துறைமுக வளாகத்தில் இருந்து 34.544 மெட்ரிக் டன் இரும்பு தாதுவை கோவா மாநிலத்தில் உள்ள அமொனாவில் உள்ள மனுதாரரின் பெரிய இரும்பு ஆலைக்கு மாற்றிக்கொண்டு செல்ல மனுதாரருக்கு அனுமதி அளிக்கவும் கனிம விநியோக அனுமதிகள் மற்றும் வனப்பகுதியில் இருந்து தாதுக்களை எடுத்துச்செல்ல அனுமதி அளித்து ஒப்புதல் அளிக்கவும் வேறு ஏதேனும் தொகை செலுத்த அறிவுறுத்த கூடாது என்ற வகைகளுக்காக ராயல்டி செலுத்த

கேட்க்க்கூடாதென்றும் 2, 3, 4, 5 எதிர்மனுதாரர்களுக்கு உத்தரவு பிறப்பிக்க செயலுறுத்தும் நீதிப்பேராணை அல்லது பொருத்தமான வேறு நீதிப்பேராணைகளில் உத்தரவு பிறப்பிக்க வேண்டியும்.

(iii) நீதி மற்றும் சமத்துவத்தின் நலனுக்காக, வழக்கின் உண்மைகள் மற்றும் சூழ்நிலைகளின் கீழ் பொருத்தமானதாகக் கருதப்படும் பிற பொருத்தமான நீதிப்பேராணை அல்லது உத்தரவு அல்லது வழிகாட்டுதலை வெளியிடலாம்."

7. நீதிப்பேராணை மனுக்களில் கோரப்பட்ட வேண்டுரைகளுக்கு எதிராக அரசு தரப்பில் ஆட்சேபணைகள் தாக்கல் செய்யப்பட்டது. மாண்பமை உயர் நீதிமன்றம் தன்னுடைய 04.07.2017–ன் உத்தரவு மற்றும் தீர்ப்புரையில் நீதிப்பேராணைகளை அனுமதி அளித்து உத்தரவு பிறப்பித்தது. உயர்நீதிமன்றம் பிற்ப்பித்த உத்தரவில் அதிருப்தி அடைந்த அரசு இந்த மேல்முறையீட்டினை தாக்கல் செய்துள்ளது.

8) அரசு உயர்நீதிமன்ற உத்தரவுகளுக்கு எதிராக மேல்முறையீடு மேல்முறையீட்டாளர் தரப்பு வழக்கறிஞர் திரு.வி.பி.எஸ். பாட்டில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. துரு மேத்தா ஆகியோர்கள் வாதுரைகள் கேட்கப்பட்டது.

9) கற்றறிந்த மேல்முறையீட்டு தரப்பு வழக்கறிஞர்கள் மேல்முறையீட்டிற்கு ஆதரவாக உயர்நீதிமன்றம் நீதிப்பேராணை மனுக்களை அனுமதித்து நீதிப்பேராணை மனுதாரருக்கு ஆதரவாக இரும்பு தாதுக்களை அகற்ற உத்தரவு பிறப்பித்தது தவறானது என்றும் CBI நீதிபதி தன்னுடைய 15.12.2015 பிறப்பிக்கப்பட்ட உத்தரவு இறுதியான உத்தரவு என்றும் மேற்கண்ட உத்தரவில் தலையிடுவதற்கு யாதொரு வழிவகை இல்லை என்பதும் உயர் நீதிமன்றத்தின் அடிப்படையான ஒன்றாகும். மேலும் உயர்நீதிமன்றம் தவறான அணுகுமுறையுடன் நீதிப்பேராணை மனுக்களை அனுமதித்துள்ளது எனவும் கூறப்பட்டது. மேலும் நீதிப்பேராணை மனுதாரர்கள் அவர்களாகவே தாக்கல் செய்யப்பட்ட சிறப்பு மனு நம்பர் 268 முதல் பிரிவு 451/457 கு.ந.ச. சட்டத்தின் கீழ் 08.03.2016–ம் தேதி தாக்கல் செய்யப்பட்ட மொத்த எடையான 34.544 மெட்ரிக் டன் இரும்பு தாதுக்களை அப்புறப்படுத்துவதற்காக அவர்களுக்கு பாத்தியப்பட்டதை 20.3.2010 ம் தேதி கைப்பற்றப்பட்ட இரும்பு தாதுக்களை அகற்ற கேட்டிருந்த மனு பின்னாளில் அவர்களால் வாபஸ் பெறப்பட்டுள்ளது.

10. மேல்முறையீட்டாளர் தரப்பு மூத்த வழக்கறிஞர் சமர்ப்பித்த விஷயங்களை மறுத்து எதிர்மனுதார் தரப்பு வழக்கறிஞர் வழக்கு எண் குற்ற வழக்கு எண் 2/2014 தேதி 11/7/2014–ல் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையை 32 வது கூடுதல் நகர உரிமையியல் மற்றும் அமர்வு நீதிபதி மற்றும் ஊழல் தடுப்புச் சட்டத்திற்கான சிறப்பு நீதிபதி பெங்களூரு ஏற்றுக்கொள்ளப்பட்டும்

கர்நாடகா லோக்யூட்டா சிறப்பு புலனாய்வு குழுவால் பதிவு செய்யப்பட்ட குற்ற வழக்கு எண் 2/2014 தேதி 11.7.2014 சமர்ப்பிக்கப்பட்ட இறுதி அறிக்கை 32 வது கூடுதல் நகர உரிமையியல் மற்றும் அமர்வு நீதிபதி மற்றும் ஊழல் தடுப்பு சட்டம் பெங்களூர் ஏற்றுக்கொள்ளப்பட்ட வழக்கு பிரிவு 451, 457 குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு முற்றிலும் வேறுபட்ட வழக்காகும் என்றும் மேல்முறையீட்டாளர் தரப்பு வழக்கறிஞரால் கூறப்பட்டது.

11. எதிர்மனுதார் தரப்பு வழக்கறிஞர் நீதிப்பேரணை மனு 562/2009 ல் இந்த நீதிமன்றம் வழங்கிய வழிகாட்டுதலின் படி சிறப்பு புலனாய்வுத் துறையால் விசாரணை மேற்கொண்டு கர்நாடகா லோக்யூத்தா நீதிமன்ற சிறப்பு புலனாய்வு உத்தரவுப்படி விசாரணை நடத்தி கர்நாடகா லோக்யூத்தா SIT காவல் நிலையத்தில் குற்ற எண் 2/2014 என்ற வழக்கு பதிவு செய்யப்பட்டு முழுமையான விசாரணைக்குப் பின் 08.10.2015–ம் தேதி இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதை நீதிமன்றம் 15.12.2015–ம் தேதி ஏற்றுக்கொள்ளப்பட்டது. எதிர்மனுதார்களுக்கு எதிராக எந்த குற்றமும் கண்டுபிடித்து நிரூபிக்கப்படாததால் உயர்நீதிமன்றம் கைப்பற்றப்பட்ட இரும்பு தாதுக்களை எதிர்மனுதார் அப்புறப்படுத்தி கொள்வதற்காக உத்தரவு பிறப்பித்தது சரியானதாகும். 20.03.2010 அன்று பறிமுதல் செய்யப்பட்ட எதிர்மனுதாரர் நிறுவனத்திற்குச் சொந்தமான சுமார் 34544 மெட்ரிக் டன் இரும்புத் தாதுக்களை விடுவிக்க கோரப்பட்ட எதிர்மனுதாரின் மனுவில் விண்ணப்பதாரரின் நிறுவனமான ஸ்ரீ மல்லிகார்ஜுன் சிப்பிங்

பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் ஒதுக்கப்பட்ட பெலேகேரி துறைமுகப் பகுதியில் உள்ளது. மேலும் மேற்கண்ட இரும்பு தாது உரிமைக் கோரியிருக்கும் வழக்கு எண் 189/2010 ல் கைப்பற்றப்பட்டு நிலுவையில் இருந்து வேறுபட்டது என்று சமர்ப்பித்தார்.

12. தரப்பினரின் கற்றறிந்த வழக்கறிஞர்களின் சமர்ப்பித்த ஆவணங்களையும் ஆராய்ந்தோம்.

13. உயர்நீதிமன்றம் தன்னுடைய நீதிப்பேராணை மனுவை அனுமதிக்கும் உத்தரவில் சிறப்பு புலனாய்வுத் துறை நீதிபதி தன்னுடைய 15.12.2015–ஆம் தேதிய உத்தரவில் எதிர்மனுதாரருக்கு ஆதரவாக இரும்பு தாதுவை விடுவிப்பதற்கான இறுதி அறிக்கையை ஏற்றுக் கொண்டதை குறிப்பிட்டும் மேலும் இந்த நீதிமன்றம் 7.9.2012–ல் சட்டவிரோதமாக பதுக்கி வைக்கபட்ட இரும்பு தாது சம்பந்தமாக புலனாய்வு செய்ய சிறப்பு புலனாய்வுத் துறைக்கு உத்தரவிட்டதை தொடர்ந்து சிறப்பு புலனாய்வு குழு ஏற்படுத்தி இறுதி அறிக்கை தாக்கல் செய்ததையும் உயர்நீதிமன்றம் தன்னுடைய தீர்ப்புரை பத்தி 10 முதல் 15 ல் நீதிபேரணை மனுவினை அனுமதிக்க அனைத்து விசயங்களையும் முழுமையாக கவனித்துள்ளது. உயர்நீதிமன்றதின் தீர்ப்புரை பத்தி 8 முதல் 15 வரையுள்ளது பின்வருமாறு

"8. அதன்படி அரசால் அமைக்கப்பட்ட சிறப்பு புலனாய்வு குழு (சுருக்கமாக எஸ்.ஐ.டி) நியமிக்கப்பட்டு அவர்கள் இறுதி அறிக்கையை சமர்ப்பித்தனர். அது நீதிபேராணை மனுதாருக்கு சார்பாக இருந்தது. சிறப்பு புலனாய்வுத் துறை நீதிபதியும் தன்னுடைய 2015 டிசம்பர் 15–ன் உத்தரவின் மூலம் இறுதி அறிக்கையை ஏற்றுக்கொண்டார்.

9.கற்றறிந்த வழக்கறிஞர் திரு.பணிந்திரா தனது கட்சிக்காரருக்காக சரக்குகளை விடுவிப்பு செய்ய உத்தரவிட கேட்கிறார்.

10. கூடுதல் அரசு தரப்பு வழக்கறிஞர் வி.ஜி.பானுபிரகாஷ் திருட்டு வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் பொருள்களை மனுதாருக்கு சாதகமாக விடுவிப்பு செய்யகூடாது என்கிறார்.

11. எஸ்.ஐ.டி–ஆல் சமர்ப்பிக்கப்பட்ட இறுதி அறிக்கையை அடுத்து இரும்புதாதுவை மனுதாருக்கு சாதகமாக விடுவிக்க எந்த தடையும் இல்லை. பொருட்களின் பட்டியல் தயார் செய்து இரும்புதாதுவை நீதிபேரணை மனுதாருக்கு சாதகமாக உடனேயே விடுவிப்பு செய்யவேண்டும். இவைகள் அனைத்தும் 4 வாரங்களுக்குள் முடிக்கவேண்டும்.

12. அதனால் நீதிபேரணை மனுக்கள் அனுமதிக்கப்படுகிறது.

13. இந்த சமயத்தில் திரு.பணிந்தரா அதிகாரிகள் ராயல்டியை கேட்கலாம் என்ற அச்சத்தை வெளிபடுத்தினார்.

14. சரக்குகள் துறைமுக பகுதியில் இருப்பதாலேயே ராயல்டி செலுத்தப்பட்டதாக கருதலாம். இல்லையென்றால் எடுத்துச்செல்ல அனுமதி கொடுக்கமுடியாது. எனவே வழக்கறிஞரின் அச்சம் தேவையில்லாதது.

15. செலவுதொகை பற்றி உத்தரவு இல்லை.

ஒப்பம்/–

தலைமை நீதியசரர்

ஒப்பம்/–

நீதியரசர்"

14. எஸ்.ஐ.டி.–யால் புலணாய்வு செய்யபட்ட குற்ற வழக்கு எண் 2/2014 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதார் 21.8.2014–ல் அனுப்பப்பட்டதாக தாக்கல் செய்துள்ள கு.ந.ச. பிரிவு 91 கீழ் தி/ள்.சேஷா கோவா லிமிடெட் அதன் நிர்வாக

இயக்குனர்/இயக்குனர் தற்போது தி/ள்.வேதாந்த லிமிடெட்(எதிர்மனுதார்)–க்கு அனுப்பிய அறிவிப்பில் இந்த நீதிமன்றத்தின் உத்தரவு பதிவுசெய்யப்பட்ட குற்ற வழக்கு ஆகியவைகளை குறிப்பிட்டுள்ள ஆரம்ப பத்தியில் கண்ட விசயங்கள் இங்கு கருத்தில் கொள்ள வேண்டியது உதவியாக இருக்கும்.

கர்நாடகா லோக்ஆயுக்தா

சிறப்பு புலனாய்வுக் குழு

எண்.SP2/CR/02/2014/SIT/KLA/03 தேதி: 21.08.2014

காவல்துறை அறிவிப்பு

(கு.ந.ச பிரிவு 91–ன் கீழ்)

மாண்புமிகு உச்சநீதிமன்றம் (நீதிபேரானை மனு 562/2009 IA 189 தேதி 16.09.2013) பிறப்பித்த உத்தரவுப்படி கர்நாடக மாநில அரசு சட்டவிரோதமாக இரும்பு தாதுவை வெட்டி எடுப்பது சம்பந்தமாக புலனாய்வு செய்ய சிறப்பு புலனாய்வு குழு கர்நாடகா லோக் ஆயுக்தா பெங்களூர் நியமனம் செய்யப்பட்டு புலனாய்வு செய்து காவல்நிலையத்தில் தங்கள் நிறுவனத்தின் பேரில் குற்ற வழக்கு எண் 02/2014 KLA பிரிவு 379, 420 அதனோடு 120(b) இ.த.ச & 13(2), அதனோடு 13(1)(d) பி.சி சட்டம் & 21, 23 அதனோடு 4(1)(a) MMRD சட்டம் 1957. படி பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, உங்கள் நிறுவனத்தின் (தி/ள். மினரல் என்டர்பிரைசஸ் லிமிடெட் எண் 49.3 வது தளம் கானிஜாபாவனா ரேஸ்கோர்ஸ் ரோடு) செயல்பாடுகள் / பரிவர்த்தனைகள் தொடர்பான அதிகாரியை கீழ்க் கையொப்பமிடப்பட்டவர்கள் முன்பாக 30.8.2014 அன்று 10.30 மணிக்கு சிறப்பு புலனாய்வுக் குழு அலுவலகத்தில், ATIC கட்டிடம், கால்நடை அறிவியல் பல்கலைக்கழகம், ஹெப்பல், பெங்களூரில் ஆஜராகுமாறு அரிவுறுத்தவும். அந்த அதிகாரிவரும் போது கிழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் பட்டியல்கள் கணினி வழி ஆவணங்கள் கொண்டுவர வேண்டியது.

……

15. மேற்கூறிய நடவடிக்கையில் தான் இறுதி அறிக்கை 08.10.2015 அன்று சமர்ப்பிக்கப்பட்டது. 32 வது கூடுதல் நகர உரிமையியல் மற்றும் அமர்வு நீதிபதி மற்றும் பெங்களூரு நகரில் ஊழல் தடுப்புச் சட்டத்திற்கான சிறப்பு நீதிபதியிடம் எதிர்மனுதார் இறுதி அறிக்கை நகலை குற்ற எண் 2/2014 இல் தாக்கல் செய்துள்ளார், இறுதி அறிக்கையை தாக்கல் செய்வது கவனிக்கப்பட்டு, நீதிமன்றமும் முறையீட்டாளருக்கு 15.12.2015–க்குள் திரும்பப்பெற வேண்டிய அறிவிப்பு அனுப்பப்பட்டது. நீதிமன்றம் 15.12.2015 அன்று, குற்ற எண். 2/2014 ல் கீழ்க்கண்ட உத்தரவு பிறப்பித்தது.

"முறையீட்டாளர் ஸ்ரீ மஞ்சுநாதா அன்னிகேரி, காவல்துறை கண்காணிப்பாளர் சிறப்புப் புலனாய்வுக் குழு, கர்நாடகா லோக்ஆயுக்தா, பெங்களூரு ஆஜராகி, பதிவேடுகளை ஆய்வு

செய்ததில் விசாரணையின் முடிவில் குற்றம் சாட்டப்பட்ட அனைவருக்கும் எதிராக எந்த வழக்கும் பதிவு செய்யப்படவில்லை என்பதை சமர்ப்பித்தார். 'பி' அறிக்கையை ஏற்பதில் தனக்கு ஆட்சேபனை இல்லை என்று சமர்பித்தார்.

நான் பதிவுகளை பார்வையிட்டதில் விசாரணை அதிகாரி சமர்பித்தபடி ஆவணங்களில் குற்றம் சாட்டப்படவர்களுக்கு எதிராக போதுமான ஆதாரங்கள் உள்ளது என்பது புலனாகவில்லை. "பி" அறிக்கையை பார்வையிட்டதிலும் குற்றம்சாட்டப்பட்ட அனைவருக்கும் எதிராக வழக்கினை தொடர போதுமான ஆதாரங்கள் இல்லை என்பதை கண்டறிந்தேன். அதன்படி "பி" அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(வி.ஜி.போப்பையா)

XXIII ACC மற்றும் சிறப்பு நீதிபதி

பெங்களூர் நகரம்."

16. மேற்கூறியவற்றிலிருந்து, 15.12.2015 உத்தரவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட இறுதி அறிக்கையானது அன்று ஏற்றுக்கொள்ளப்பட்ட, இறுதியானது. இந்த நீதிமன்றம் நீதிபேரானை மனு 562/2009 ல் பிறபித்த உத்தரவின் பேரில் SIT விசாரணைக்குப் பிறகு பதிவுசெய்யப்பட்ட குற்ற எண் 2/2014 வழக்கின் இறுதி அறிக்கை என்பது தெளிவாகிறது. மேற்கண்ட

வழக்கில், எதிர்மனுதாருக்கு எதிராக எந்தக் குற்றமும் காணப்படவில்லை.

17. சிறப்பு குற்றவியல் வழக்கு எண் 268/2013 மற்றும் சி.சி. எண்கள் 11, 14, 15, 36, 37, 38, 53 & 54/2014-ல் பிரிவு 451/457 குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் தக்கல் செய்த மனுவை அனுமதித்து 8.5.2015-ன் உத்தரவு ஆகும். 8.5.2015 உத்தரவின் முக்கிய செயல்பாட்டு பகுதியை பிரிப்பது பயனுள்ளதாக இருக்கும் இது பின்வரும் விளைவைக் கொண்டுள்ளது:

உத்தரவு

மாநில அரசு 451/457 குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்த விண்ணப்பத்தை மனுதார்/அரசு கைபற்றப்பட்ட இரும்பு தாதுவை இ-டெண்டர் மூலம் அப்புறப்படுத்த கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டுவிட அனுமதி அளித்து பிறப்பித்தது.

1. மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட 'கண்காணிப்புக் குழு' ன் மேற்பார்வையின் கீழ் இ-டெண்டர் மூலம் பொருள் ஏலம் விடப்படும்.

2. இ-டெண்டர் ஏலம் லோக்ஆயுக்தா துறைக்கு தகவல் அளித்து சிறப்பு புலனாய்வுத் துறை அதிகாரிகளை உள்ளிட்டு நடத்தப்படும்.

3. சுரங்கங்கள் மற்றும் புவியியல் துறை மூலம் 56 இரும்புத்தாதுக் குவியல்களில் தனித்தனியாக ஒவ்வொன்றின் தரம் மற்றும் அளவை அளவீடு செய்த பின்னரே இ–டெண்டர் ஏலம் நடத்தப்படும்.

4. 56 இரும்புத் தாதுக் குவியல்களில் ஒவ்வொன்றின் மாதிரிகளையும் தனித்தனியாக எடுத்து, பஞ்சநாமம் வழங்கப்பட்டு பின் இ –டெண்டர் நடத்தப்படும்.

5. இ–டெண்டர் செயல்முறையானது வீடியோகிராபி மூலம் எடுக்கப்பட்டு இரும்புத் தாதுவை அப்புறப்படுத்துவதுடன் முடிந்துவிடும்.

6. ஏலத் தொகை உடனடியாக நீதிமன்றத்தில் சிறப்பு வழக்கு எண் 268/2013 ல் வைப்பீடு செய்யப்பட்டு அதற்குரிய நகல் வழக்கு கட்டில் இருக்கவேண்டும்.

7. ஏலதாரரால் அப்புறப்படுத்தப்பட்ட இரும்பு தாதுவின் சரியான அளவீட்டினை பதிவு செய்து DMG வைத்திருக்க வேண்டும்.

அதன் அசல் சிறப்பு வழக்கு 268/13 லும் அதன் நகல் சிறப்பு எண்கள் 11/14, 14/14, 15/14, 36/14, 37/14, 38/14, 53/14 & 54/14 ல் வைக்கவேண்டும்.

(தீர்ப்பு எழுதுபவர்க்கு அனுப்பப்பட்டு திருத்தப்பட்டு கையொப்பம் இடப்பட்டது. மே 8 2015 ல் திறந்த நீதிமன்றத்தில் என்னால் பகரப்பட்டது.

ஒப்பம்/–08/05/2015

(பிரதீப் எஸ். பாலிகல்)

32 வது கூடுதல் நகர உரிமையியல் மற்றும்

அமர்வு நீதிபதி மற்றும்

சிறப்பு புலனாய்வுத் துறை

வழக்குகளுக்கான நீதிபதி, பெங்களூரு"

18. மேற்கூறியவற்றிலிருந்து, 08.05.2015 தேதியிட்ட ஆணை, 15.03.2010, அன்கோலா காவல் நிலைய குற்ற எண் 189/2010 தேதியிட்ட மு.த.அ பதிவு மூலம் தொடங்கப்பட்டு பல்வேறு நடவடிக்கைகளில் நிறைவேற்றப்பட்டது என்பது தெளிவாகிறது. சிறப்பு புலனாய்வுத் துறை விசாரணைக்குப் பிறகு, மேலே குறிப்பிடப்பட்ட வழக்குகள் குற்றஅறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டன. 08.05.2015 தேதியிட்ட உத்தரவின்படி விடுவிக்கப்பட வேண்டிய இரும்புத் தாதுக்கள் 20.03.2010 அன்று கைப்பற்றப்பட்டது. மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்த கூடுதல் ஆவணங்களில், பிரிவு 451/457 கு.ந.ச இன் கீழ் எதிர்மனுதாரரின் சார்பாக ஐ.ஏ 08.03.2016 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட விளைவுகளுக்கு எதிர்மனுதார் தாக்கல் செய்த

விண்ணப்பதில் கூறப்பட்டிருந்த வேண்டுரையைப் பிரித்து பார்த்தால் உதவியாக இருக்கும்.

வேண்டுரை

எனவே மாண்புமிகு இந்த நீதிமன்றம் இந்த விண்ணப்பதாரருக்கு சொந்தமான 20.3.2010 ல் கைப்பற்றப்பட்டு பெலகிரி துறைமுகத்தில் இந்த நிறுவனத்திற்காக ஸ்ரீ மல்லிகார்ஜுனா ஷிப்பிங் தனியார் நிறுவனத்தால் ஒதுக்கப்பட்டு கொடுத்துள்ள இடத்தில் இருந்து வரும் 34544 மெகா டன் இரும்பு தாதுவை விடுவிக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டியுள்ளது.

இடம்: பெங்களூர்

தேதி : 08.03.2016

விண்ணப்பதாரர் :

[ஆனந்த் பிரகாஷ் துபே, நிதித்துறைத்தலைவர், இரும்பு தாது கர்நாடகா]

விண்ணப்பதாரர் வழக்கறிஞர், (கே.என். பனீந்திரா)"

19) இதிலிருந்து 15/12/2015 இறுதி அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்ட வழக்கான குற்ற வழக்கு எண் 2/2014 இரும்பு தாது பறிமுதல் செய்யபட்ட வழக்கு இல்லை என்பது

தெளிவாகிறது. மாறாக இரும்பு தாது கைப்பற்றப்பட்டது வெவ்வேறு நடவடிக்கை மூலம் என்பதும் அதில் 8.2.2015 உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மாநில அரசால் இரும்பு தாதுவை விடுவிக்க பிரிவு 451/457 கீழ் தாக்கல் செய்த விண்ணப்பம் வேறு நடவடிக்கையில் செய்யப்பட்டுள்ள நிலையில் 15/12/2015 இறுதி அறிக்கையை ஏற்றுக்கொள்வதால் குற்றவழக்கு எண் 172/2014 ல் எந்த விளைவு ஏற்படப்போவதில்லை. இவ்வாறிருக்க உயர்நீதிமன்றம் இறுதி அறிக்கை 15/12/2015 உத்தரவு ஏற்றுக்கொண்டதாக கூறி நீதிபேராணை மனுக்களை அனுமதித்து உள்ளது. உயர்நீதிமன்றம் நீதிபேரானை மனுக்களை அனுமதித்த போது சொல்லியுள்ள விஷங்களில் பத்தி 8 முதல் 15 ஏற்கனவே எங்களால் முழுமையாக பரிசீலிக்கப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றம் நீதிப்பேராணை மனுவை அனுமதிக்கும் போது, சிறப்பு புலனாய்வுத் துறை நீதிபதியின் 15.12.2015 தேதியிட்ட இறுதி அறிக்கையை ஏற்றுக்கொள்வதை மட்டுமே கவனத்தில் கொண்டுள்ளது. இது மேலே குறிப்பிட்டுள்ளபடி, விசாரணை நீதிமன்றம் பிறப்பித்த 08.05.2015 தேதியிட்ட உத்தரவுக்கு பொருந்தாது.

20. மேல்முறையீட்டாளரின் கற்றறிந்த மூத்த வழக்கறிஞர் உயர் நீதிமன்றத்தின் மற்றொரு தீர்ப்பிணை கவனத்திற்கு கொண்டுவந்தார், அதில் 08.05.2015 தேதியிட்ட அதே உத்தரவுக்கு எதிராக உயர்நீதிமன்றதில் தாக்கல் செய்த மற்றொரு நீதிப்பேராணை மனுவில் அந்த நீதிப்பேராணை மனுதாரர் கைப்பற்றப்பட்ட இரும்புத் தாதுவை அதன் இரும்பு மற்றும் உரிமையை நிரூபிப்பதன் மூலம் அதிகார வரம்பிற்கு உட்பட்ட

குற்றவியல் நீதிமன்றத்தை அணுகி உத்தரவு பெற்றுக்கொள்ளவேண்டும் என நீதிப்பேராணை மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. நீதிப்பேராணை மனு எண் 29527–29531 மற்றும் 2017–ம் ஆண்டின் நீதிப்பேராணை மனு எண்கள் 29881–29884–ல் 20.11.2017 தேதியிட்ட கர்நாடக உயர் நீதிமன்றத்தின் உத்தரவு இணைப்பு பி–11 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

21. முடிவில் மேலே கூறப்பட்ட சங்கதிகளிலிருந்து உயர்நீதிமன்றம் பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்புரை முழுமையாக இதன் மூலம் நீக்கரவு செய்யப்படுகிறது. எதிர்மனுதாரர் கைப்பற்றப்பட்ட இரும்பு தாதுவினை விடுவிக்க வேண்டும் என்றால் அதில் அவருக்குரிய உரிமை மற்றும் இருப்பினை நிரூபித்து 32 வது கூடுதல் நகர உரிமையியல் மற்றும் அமர்வு நீதிபதி மற்றும் பெங்களூரு சிறப்பு புலனாய்வுத் துறை வழக்குகளுக்கான சிறப்பு நீதிபதி (CCH–34) முன் தகுந்த விண்ணப்பத்தை தாக்கல் செய்யலாம். அதனுடைய அதிகார வரம்பிற்குட்பட்ட குற்றவியல் நீதிமன்றம் பரிசீலிக்கப்படலாம். குற்றவியல் மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது.

பொறுப்புத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."